## December 30, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. நீண்ட தொலைவு பாயும் குரூஸ் வகை ஏவுகணை சோதித்துப் பார்த்ததாக வட கொரியா அறிவித்தது.

    i. வட கொரியாவின் பாலிஸ்டிக் வகை ஏவுகணைகளை சோதிப்பதற்கு ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் தடை விதித்துள்ளது. குரூஸ் வகை ஏவுகணை சோதனைகள் தடை செய்யப்படவில்லை.

    ii. இருந்தாலும், அந்த வகை ஏவுகணைகளை அதிக லாவகத்துடன் செலுத்த முடியும்; அவற்றை குறைந்த உயரத்தில் பறக்கச் செய்யமுடியும் என்பதால் ராடார் கண்காணிப் பில் இருந்து தப்ப அவற்றால் முடியும். மோதல் ஏற்பட்டால் அமெரிக்கா மற்றும் தென் கொரியாவின் போர்க் கப்பல்கள், விமானங்களைத் தாக்கி அழிக்க குரூஸ் வகை ஏவுகணைகளை வட கொரியா பயன் படுத்தலாம் என்று நிபுணர்கள் எச்சரித்துவருகின்றனர்.

2. 17 ஆண்டுகளுக்குப் பிறகு வங்கதேசம் திரும்பிய அந்த நாட்டு முன்னாள் பிரதமர் கலீதா ஜியாவின் மகன் தாரிக் ரஹ்மான் (60), வரும் பிப்ரவரி மாதம் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்தார்.

    i. நாட்டின் 13-ஆவது நாடாளுமன்றத்தைத் தேர்ந்தெடுப்பதற்காக பிப்ரவரி 12-ஆம் தேதி நடைபெறவிருக்கும் அந்தத் தேர்தலில் 17-ஆவது டாக்கா தொகுதியில் தாரிக் ரஹ்மான் போட்டியிடவுள்ளதாக வங்கதேச தேசிய வாத கட்சி (பிஎன்பி) வட்டாரங்கள் தெரிவித்தன.

    ii. முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவின் ஆட்சிக் காலத்தின்போது பணமோசடி, ஷேக் ஹசீனாவைக் கொலை செய்ய சதி போன்ற வழக்குகளில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த தாரிக் ரஹ்மான், 2008-ஆம் ஆண்டுமுதல் நாட்டைவிட்டு வெளியேறி லண்டனில் வசித்து வந்தார்.

    iii. கடந்த ஆண்டு நடைபெற்ற தீவிர மாணவர் போராட்டம் மூலம் ஆட்சியில் இருந்து ஷேக் ஹசீனா அகற்றப்பட்ட பிறகு குற்ற வழக்குகளில் இருந்து கலீதாவும், தாரிக்கும் விடுவிக்கப்பட்டனர். தற்போது கலீதா ஜியாவின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ள நிலையில், தாரிக் ரஹ்மான் நாடு திரும்பினார்.

    iv. தற்போது வேட்புமனு தாக்கல் செய்துள்ள அவர், பிஎன்பி கட்சியின் பிரதமர் வேட்பாளராகப் போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

    v. ஷேக் ஹசீனா தலைமையிலான அவாமி லீக் தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கப்பட்டுள்ளதால், தேர்தலில் பிஎன்பி எளிதில் வெற்றி பெற வாய்ப்புள்ளதாகக் கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன. எனவே, நாட்டின் அடுத்த பிரதமராக தாரிக் ரஹ்மான் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தெரிகிறது.

3. ஒடிஸா மாநிலம் சண்டிபூர் சோதனை மையத்திலிருந்து விண்ணில் சீறிப் பாயும் பினாகா நீண்ட தொலைவு தாக்குதல் திறன்கொண்ட ஏவுகணை. திங்கள்கிழமை

நடைபெற்ற இச்சோதனை வெற்றிகரமாக அமைந்ததாக பாதுகாப்புத் துறை உற்பத்தி-மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்தது. சோதனையின்போது 120 கி.மீ. தொலைவிலிருந்த இலக்கை பினாகா ஏவுகணை துல்லியமாகத் தாக்கி அழித்தது.

4. ஜார்க்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூரில் சந்தாலி மொழி தின நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பங்கேற்றார். (OL சிக்கி எழுத்துமுறையின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள்)

5. தமிழகத்தில் நிகழாண்டில் டெங்கு பாதிப்பு கடந்த ஆண்டைக் காட்டிலும் 50 சதவீதம் குறைந்துள்ளதாக பொது சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

   i. தமிழகத்தில் மழை மற்றும் குளிர் காலங்களில் காய்ச்சல் பாதிப்புகள் அதிகரிப்பது வழக்கம். குறிப்பாக, டெங்கு காய்ச்சலைப் பரப்பும் ஏடிஸ் எஜிப்டை வகை கொசுக்கள் அதிக அளவில் உற்பத்தியாகி நோய்களைப் பரப்பக்கூடும். இதைக் கருத்தில்கொண்டு மாநிலம் முழுவதும் நோய்த் தடுப்பு மற்றும் கொசு ஒழிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டது.

   ii. கடந்த ஜூலை மாதம் முதல் அக்டோபர் வரை டெங்கு பாதிப்பு தீவிரமாக இருந்தது. சென்னை, கோவை, ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில் நாள்தோறும் 500-க்கும் மேற்பட்டோர் அப்போது பாதிக்கப்பட்டு வந்தனர்.

   iii. இந்நிலையில், மக்கள் நல்வாழ்வுத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் இணைந்து எடுத்த தொடர் நடவடிக்கையால் பாதிப்பு விகிதம் தற்போது குறைந்து நாள்தோறும் 100-க்கும் கீழ் பதிவாகி வருகிறது.

6. நீண்ட தொலைவு பயணித்து இலக்கைத் தாக்கும் ராக்கெட்டுகள், ஏவுகணைகள், ரேடார் அமைப்புகள் உள்பட ரூ.79,000 கோடி மதிப்பிலான ராணுவத் தளவாடங்களைக் கொள்முதல் செய்ய பாதுகாப்புத் துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்தது.

   i. பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் தலைமையில் நடை பெற்ற பாதுகாப்பு கொள்முதல் கவுன்சில் (டிஏசி) கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது.

   ii. இதுகுறித்து பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: இந்திய ராணுவத்தின் பீரங்கிப் படை பிரிவுக்கு இலக்கை உறுதி செய்யும் வரை வானில் பறந்து தாக்குதல் நடத்தும் ட்ரோன்கள், இலகுரக ரேடார்கள், நீண்ட தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கும் பினாகா ராக்கெட் அமைப்புக்கான வெடி பொருள்களைக் கொள்முதல் செய்ய ஒப்புதல் அளிக்கப்பட்டது.

   iii. இந்திய கடற்படைக்கு மென்பொருள் கட்டுப்பாட்டில் இயங்கும் அதிக அதிர்வெண் கொண்ட வானொலி கருவிகளைக் கொள்முதல் செய்யவும், வானில் மிக அதிக உயரத்தில் பல நாள்களுக்குத் தொடர்ந்து பறந்து உளவு,

கண்காணிப்பு உள்ளிட்ட பணிகளில் ஈடுபடும் ட்ரோன்களை குத்தகைக்கு வாங்கவும் முடிவுசெய்யப்பட்டது.

iv. இந்திய விமானப் படைக்கு விமானங்கள் தரையிறங்கும்போதும் வானை நோக்கி புறப்படும் போதும் ரேடார்கள், கேமராக்கள், லேசர்கள் போன்ற சென்சார்கள் மூலம், தானியங்கி முறையில் விமானங்களை வழிநடத்தும் அமைப்பு, அஸ்திரா எம்கே-2 ஏவுகணைகள் உள்ளிட்டவை கொள்முதல் செய்யப்படவுள்ளன.

7. அண்மையில் வெளியாகியுள்ள தேசிய குடும்பநலக் கணக்கெடுப்பு 6-ஆவது சுற்றில், தமிழகத்தின் மொத்தக் கருவுறுதல் விகிதம் 1.4 முதல் 1.7 சதவீதம் வரை நிலை பெற்றுள்ளது. இது மறுசீரமைப்பு நிலை எனப்படும் 2.1 சதவீதத்தைவிடக் குறைவானதாகும். அதேசமயம் பிறப்பு பாலின விகிதம் அதிகரித்துள்ளது. இது ஒரு வரவேற்கத்தக்க முன்னேற்றம் என்றாலும், உயிரியல்ரீதியான சமநிலையை எட்ட இன்னும் நீண்ட தொலைவு பயணிக்க வேண்டியுள்ளது.

i. கடந்த 2023-இல் தமிழகத்தில் 9,02,306 பிறப்புகள் பதிவாகியுள்ளன. பிறப்பு விகிதம் 11.7 சதவீதம். ஆனால், 2024- இல் பிறப்பு எண்ணிக்கை 8,42,412-ஆகக் குறைந்துள்ளது. இது 2023-ஐ விட 6.6 சதவீத சரிவாகும். அதேபோல, 2023-24-இல் தமிழகத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் 1,000 ஆண் குழந்தைகளுக்கு 941 என இருந்தது. 2024-25 பிப்ரவரி வரை இது 940-ஆக உள்ளது. சராசரியாக கடந்த 6 ஆண்டுகளில் தமிழகத்தில் பெண் குழந்தைகளின் பிறப்பு விகிதம் சுமார் 11 சதவீதம் குறைந்துள்ளதாக குடும்பநல அமைச்சகத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன.

ii. பெண் பாலின விகித சரிவு எதிர்காலத்தில் திருமணத்துக்குப் பெண் கிடைக்காமல்போவது தொடங்கி, பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிப்பது வரை கடுமையான சமூக விளைவுகளை ஏற்படுத்தும். இதைத் தடுப்பதற்காகவே இந்திய அரசு,கருத்தரிப்புக்கு முந்தைய மற்றும் பேறுகாலப் பாலினத் தேர்வு தடைச் சட்டம் 1994-ஐ கடுமையாக்கியுள்ளது. அதேபோல, தமிழகத்தில் கர்ப்பமாகும் ஒவ்வொரு பெண்ணும் 'பிக்மி' எண்ணைப் பெறுவது கட்டாயம். இந்த எண் இல்லாமல் பிறப்புச் சான்றிதழ் பெற முடியாது. இது மேம்படுத்தப்பட்ட 3.0 மென்பொருள், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளதால், கர்ப்பிணிகள் இடம்பெயர்ந்தாலும் அவர்களைக் கண்காணிக்க முடிகிறது.

iii. ஒரு பெண் கர்ப்பமாகப் பதிவு செய்யப்பட்டு, குழந்தை பிறப்பு பதிவு செய்யப்படவில்லை என்றால், அந்த கர்ப்பம் எப்படிக் கலைந்தது என்று சுகாதாரத் துறை கேள்வி எழுப்புகிறது. இது கள்ளக்கருக்கலைப்பைக் குறைப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது என்பதால் தமிழக சுகாதாரத் துறையின் இந்த நடவடிக்கை பாராட்டைப் பெற்றுத்தந்துள்ளது.

iv. அதேபோல, அல்ட்ராசவுண்ட் இயந்தி ரங்களில் 'சைலண்ட் அப்சர்வர்' போன்ற கருவிகளைப் பொருத்துவதன் மூலம், ஒவ்வொரு ஸ்கேனும் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும். பள்ளி மற்றும் கல்லூரிகளில் பாலின சமத்துவம் குறித்த பாடங்கள் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

v. ஒவ்வொரு பெண் குழந்தையும் உயிர் வாழ்வதற்கான அடிப்படை உரிமையைப் பெற்றுள்ளது. பெண் சிசுக் கருவை அழிப்பது, மனிதகுலத்தின் எதிர்காலத்தையே அழிப்பதற்குச் சமம். சட்டத்தின் கரங்கள் குற்றவாளிகளின் கழுத்தை நெரிக்கும் அதேவேளையில், சமூகத்தின் கரங்கள் பெண் குழந்தைகளை அரவணைக்க நீண்டால் மட்டுமே, இந்த மொட்டுகள் கருகாமல் மலர்ந்து மணம் வீசும்.